ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சுவாமிநாத சுவாமிகள் கலைக் கல்லூரி

திருப்பனந்தாள் – 612504

S.K.S.S ARTS COLLEGE, THIRUPPANANDAL - 612504





# வினாவங்கி

தாளின் தலைப்பு

# யாப்பருங்கலக்காரிகை

**CORE COURSE X III B.LIT**

**பாடக்குறியீடு : 16LCCLT10**

பருவம் **V**

**தயாரித்தவர்**




**முனைவர் ம.புவனேஸ்வரி,** எம்.ஏ., எம்.பில்., பிஎச்.டி.,

உதவிப்பேராசிரியர்

தமிழாய்வுத்துறை

# CORE COURSE X

## யாப்பருங்கலக்காரிகை

**பாட நோக்கம்**

1. தமிழ் யாப்பிலக்கணம் கற்பித்தல்.
2. பா வகைகளைப் பயிற்றுவித்தல்.
3. பா இனங்களைக் கற்றுத்தருதல்.

**மாணவர் பெறும் திறன்**

1. செய்யுள் உறுப்புக்களை அறிவர்.
2. பா வகைகள், பாவினங்களை அறிவர்.
3. மரபுக் கவிதை படைக்கும் தூண்டுதல் பெறுவர்.

| | | |
|---|---|---|
| **அலகு - 1** | பாயிரம், எழுத்து, அசை | 10 மணி |
| **அலகு - 2** | சீர், தளை, அடி, தொடை | 30 மணி |
| **அலகு - 3** | வெண்பா, அகவற்பா | 20 மணி |
| **அலகு - 4** | கலிப்பா, வஞ்சிப்பா, மருட்பா | 20 மணி |
| **அலகு - 5** | ஒழிபியல் | 10 மணி |

**பார்வை நூல்**


1. மே.வி. வேணுகோபால் - யாப்பருங்கலக்காரிகை, கழக வெளியீடு, சென்னை.
2. டாக்டர் கு.முத்துராசன் - எளிய முறையில் யாப்பிலக்கணக்காரிகை, பாரி நிலையம் சென்னை.
3. வசந்தா - யாப்பிலக்கண வினாவிடை, பாரி நிலையம், சென்னை.


**இணைய முகவரிகள்**

1. www.store.tamillexicon.com
2. www.kala.tamilforu.blogspot.com
3. www.noolaham.in
4. www.tamilpeper.net
5. www.sangatham.com

# அலகு – 1

## பகுதி - அ

❖ **சரியான விடையைத் தேர்ந்தெடு:**

1. பிண்டி என்பதன் பொருள்
   அ) மலர்
   ஆ) அசோகு
   இ) மரம்
   ஈ) மணம்

2. யாப்பருங்கலக்காரிகையின் ஆசிரியர்

   அ) பவணந்தி முனிவர்
   ஆ) குணசாகரர்
   இ) அமிர்தசாகரர்
   ஈ) மயிலைநாதர்

3. காரிகை எந்த அரசனது முன்னிலையில் அரங்கேற்றப்பட்டது
   அ) பாண்டியன்
   ஆ) சோழன்
   இ) பல்லவன்
   ஈ) சேரன்

4. ‘கானார் மலயத்தருந்தவன்’ என்று குறிப்பிடப்படுபவர்
   அ) குணசாகரர்
   ஆ) அமிர்தசாகரர்
   இ) பாண்டியமன்னன்
   ஈ) அகத்தியர்

5. ‘ஆவி’ என்று சுட்டப்படுவது
   அ) அசை
   ஆ) உயிர்
   இ) மெய்
   ஈ) மாத்திரை

6. காடு என்பது
   அ) குற்றியலிகரம்
   ஆ) முற்றியலுகரம்
   இ) குற்றியலுகரம்
   ஈ) அளபெடை

7. ஆய்தக்குறுக்கத்திற்குரிய மாத்திரை அளவு

ஆ) 1/4
ஆ) 1/2
இ) 11/2
ஈ) 1

8. அசையின் வகைகள்
அ) 4
ஆ) 5
இ) 2
ஈ) 6

9. நெட்டெழுத்து ஒற்றடுத்துவரின்
அ) நிரையசை
ஆ) ஈரசை
இ) ஓரசை
ஈ) நேரசை

10. சுறா என்பது
அ) நேரசை
ஆ) நிரையசை
இ) ஈற்றசை
ஈ) மூவசை

**விடைகள்** 1.ஆ 2.இ 3.அ 4.ஈ 5.ஆ 6.இ 7.அ 8.இ 9.ஈ 10.ஆ

## பகுதி – ஆ

❖ **ஓரிரு சொற்களில் விடையளி**

11. யாப்பருங்கலக்காரிகை எத்தனை இயல்களைக் கொண்டது? அவை யாவை?
12. பந்தம் என்னும் சொல்லின் பொருள் தருக.
13. ‘யானா நடாத்துகின்றேன் என்று எனக்கே நகைதருமால்’ இடம் சுட்டி விளக்குக.
14. இமயத்தை அடைந்த கருங்காக்கை எவ்வாறு இருக்கும்?
15. குறுகிய மூவுயிர்கள் யாவை?
16. உயிர்மெய் எழுத்துகளின் எண்ணிக்கையைச் சுட்டுக.
17. ஆய்தத்தின் வேறு பெயர்களைக் குறிப்பிடுக.
18. அளபெடையின் வகைகளை எழுதுக.
19. நேரசை என்றால் என்ன?
20. நிரையசை எவ்வாறு அமையும்?

## பகுதி - இ

### ❖ விரிவாக விடையளி

21. தற்சிறப்புப்பாயிரம் உணர்த்தும் கருத்துகளை விளக்குக.
22. அவையடக்கப் பாடல்கள் மூலம் ஆசிரியரின் பெருந்தன்மையினை எங்ஙனம் உணரலாம்?
23. அவையடக்கப்பாடலில் இடம்பெற்றுள்ள உவமையைப் பொருத்திக் காட்டுக.
24. குறுகிய மூவுயிர்களை உதாரணங்களுடன் விவரி.
25. ஐகாரக்குறுக்கம் பற்றி விளக்குக.
26. அளபெடையின் வகைகளைச் சுட்டி உதாரணங்கள் தருக.
27. மாத்திரை என்றால் என்ன? விளக்குக.
28. நேரசையை எடுத்துக்காட்டுகளுடன் விவரி.
29. நிரையசையை எடுத்துக்காட்டுகளுடன் விவரி.
30. ‘அணிநிழ லசோகமர்ந்து’ என்னும் உதாரணப்பாடலில் இடம்பெற்றுள்ள அசைகளை விளக்குக.

## பகுதி - ஈ

### ❖ கட்டுரை வடிவில் விடையளி:

31. தற்சிறப்புப்பாயிரம் குறித்துக் கட்டுரை வரைக.
32. தற்சிறப்புப் பாயிரத்தால் அறியலாகும் செய்திகளை வகைப்படுத்தி விளக்குக.
33. அவையடக்கம் என்றால் என்ன? காரிகையில் இடம்பெற்றுள்ள அவையடக்கப் பாடல்களின் சிறப்புகளை எடுத்துரைக்க.
34. அசைக்கு உறுப்பாகும் எழுத்துகளைக் கட்டுரைக்க.
35. ‘எழுத்து’ என்னும் தலைப்பில் இடம்பெறும் செய்திகளை வகைப்படுத்துக.
36. ‘அறிஞர் உரைத்த அளபும் அசைக்குறுப் பாவனவே’ – விளக்கி வரைக.
37. குறுகிய மூவுயிர், மறுவறு மூவினம், அளபெடை ஆகியவற்றை விரிவாக எடுத்துரைக்க.
38. ‘அசை’ என்னும் தலைப்பில் கட்டுரை வரைக.
39. அசையின் வகைகளை உதாரணப்பாடல்களுடன் விவரிக்க.
40. அசை பற்றிக் காரிகையில் இடம்பெற்றுள்ள செய்திகளை எடுத்துரைக்க.

# அலகு – 2

## பகுதி – அ

### ❖ சரியான விடையைத் தேர்ந்தெடு:

1. அகவல் எனப்படுவது
   அ) வெண்பா
   ஆ) ஆசிரியப்பா

இ) கலிப்பா
ஈ) வஞ்சிப்பா

2. நிரை நேர் - என்பதன் வாய்பாடு
   அ) புளிமா
   ஆ தேமா
   இ) கருவிளம்
   ஈ) கூவிளம்

3. ஓரசைச் சீருக்கு உதாரணம்
   அ) தண்பூ
   ஆ) நறும்பூ
   இ) நறுநிழல்
   ஈ) நாள்

4. தளையின் வகைகள்
   அ) 5
   ஆ) 6
   இ) 4
   ஈ) 7

5. முச்சீரடியின் பெயர்
   அ) குறளடி
   ஆ) அளவடி
   இ) சிந்தடி
   ஈ) நேரடி

6. எள்ளப்படாக் கலிக்கு ---------ஆகும் இழிபு
   அ) ஈரிரண்டு
   ஆ) இரண்டு
   இ) மூன்று
   ஈ) மூவிரண்டு

7. எழுவாய் எழுத்தொன்றின் -------------------
   அ) எதுகை
   ஆ) மோனை
   இ) இயைபு
   ஈ) முரண்

8. ஓரடி முழுவதும் ஒரு சொல்லே வருமாறு தொடுப்பது
   அ) அந்தாதி
   ஆ) செந்தொடை
   இ) அளபெடை
   ஈ) இரட்டைத்தொடை

9. தொடை விகற்பங்களின் எண்ணிக்கை
   அ) 35

ஆ) 30
இ) 8
ஈ) 12

10. தொடை விகற்பங்களுள் ஒன்று
    அ) பொழிப்பு
    ஆ) இயைபு
    இ) அந்தாதி
    ஈ) செந்தொடை

**விடைகள்** 1.ஆ 2.அ 3.ஈ 4.ஈ 5.இ 6.அ 7.ஆ 8.ஈ 9.அ 10.அ

## பகுதி – ஆ

❖ **ஓரிரு சொற்களில் விடையளி:**

11. மூவசைச் சீர்கள் யாவை?
12. அசைச்சீர் என்றால் என்ன?
13. நாலசைச் சீர்களின் எண்ணிக்கையைச் சுட்டுக.
14. வெண்சீர் வெண்டளை எவ்வாறு அமையும்?
15. கழிநெடிலடியில் இடம்பெறும் சீர்கள் எத்தனை?
16. நான்கு பாவிற்கும் உரிய அடியின் பேரெல்லை யாது?
17. அடியியைபுத் தொடை என்றால் என்ன?
18. செந்தொடை எவ்வாறு அமையும்?
19. தொடை விகற்பங்கள் நான்கினைக் குறிப்பிடுக.
20. ஒரூஉ என்பது யாது?

## பகுதி - இ

❖ **விரிவாக விடையளி:**

21. ஆசிரிய உரிச்சீர், வெண்பா உரிச்சீர் ஆகியவற்றை வாய்பாடுகள், உதாரணங்களுடன் விளக்குக.
22. அசைச்சீர், வஞ்சியுரிச்சீர் ஆகியவற்றை விவரிக்க.
23. நாலசைச்சீர்களை வகைப்படுத்துக.
24. தளை என்றால் என்ன? அதன் வகைகளைக் குறிப்பிடுக.
25. அடிகளின் வகைகளைக் குறிப்பிட்டு உதாரணங்கள் தருக.
26. நான்கு பாக்களுக்கும் உரிய அடியின் சிற்றெல்லை, பேரெல்லைகளைக் குறிப்பிடுக.
27. தொடையின் வகைகளை எடுத்துரைக்க.
28. அந்தாதி, இரட்டை, செந்தொடை ஆகிய தொடைகளுக்கு உதாரணங்கள் காட்டி விளக்குக.
29. தொடை விகற்பங்களைப் பட்டியலிடுக.

30. இணைமோனை முதலிய ஏழு தொடை விகற்பங்களை உதாரணங்களுடன் விளக்குக.

## பகுதி - ஈ

## ❖ கட்டுரை வடிவில் விடையளி:

31. ஈரசை, மூவசை, ஓரசைச் சீர்களை வாய்பாடுகள் மற்றும் உதாரணங்களுடன் விவரி.
32. நாலசைச் சீர்களைக் குறித்துக் கட்டுரைக்க.
33. 'பொதுவொரு நாலசையே' - இதனை விளக்கி உதாரணங்கள் காட்டுக.
34. பொதுச்சீரும் அசைச்சீரும் செய்யுளகத்து வருங்கால் தளை வழங்கும் முறைமையை உணர்த்திச் சான்றுகள் தருக.
35. தளைகளின் வகைகளைச் சான்றுகளுடன் எடுத்துரைக்க.
36. ஏழ்தளைகள் குறித்துக் கட்டுரை வரைக.
37. அடி என்னும் தலைப்பில் அமைந்துள்ள செய்திகளைத் தொகுத்துரைக்க.
38. எண்வகைத் தொடைகளை உதாரணங்களுடன் நிறுவுக.
39. தொடை விகற்பங்களைக் குறிப்பிட்டு எடுத்துக்காட்டுகள் தருக.
40. தொடையும் தொடை விகற்பங்களும் என்னும் தலைப்பில் கட்டுரை வரைக.

# அலகு – 3

## பகுதி – அ

## ❖ சரியான விடையைத் தேர்ந்தெடு

1. வெண்பாவிற்குரிய ஓசை
   அ) துள்ளல்
   ஆ) அகவல்
   இ) தூங்கல்
   ஈ) செப்பல்

2. அகவலோசை எதற்குரியது
   அ) வெண்பா
   ஆ) ஆசிரியப்பா
   இ) கலிப்பா
   ஈ) வஞ்சிப்பா

3. ஈரடி வெண்பா -------
   அ) குறள்
   ஆ) நேரிசை
   இ) இன்னிசை

ஈ) ப∴றொடை

4. திருக்குறளின் யாப்புவகை
   அ) நேரிசை வெண்பா
   ஆ) குறள் வெண்பா
   இ) ப∴றொடை வெண்பா
   ஈ) இன்னிசை வெண்பா

5. இரண்டு குறள் வெண்பாக்களுக்கு இடையே தனிச்சொல் பெற்று வருவது
   அ) இன்னிசை வெண்பா
   ஆ) ப∴றொடை வெண்பா
   இ) குறள் வெண்பா
   ஈ) நேரிசை வெண்பா

6. நான்கடியின் மிக்க அடிகளால் வரும் வெண்பா
   அ) ப∴றொடை வெணபா
   ஆ) இன்னிசை வெண்பா
   இ) குறள் வெண்பா
   ஈ) நேரிசை வெண்பா

7. வெண்பாவின் ஈற்றடி
   அ) குறளடி
   ஆ) அளவடி
   இ) சிந்தடி
   ஈ) நேரடி

8. கடையயற்பாதம் முச்சீர் வரின் ----------
   அ) இணைக்குறள் ஆசிரியப்பா
   ஆ) நேரிசை ஆசிரியப்பா
   இ) நிலைமண்டில ஆசிரியப்பா
   ஈ) அடிமறிமண்டில ஆசிரியப்பா

9. கழிநெடிலடி நான்காய்த் தம்முள் அளவொத்து வருவன
   அ) ஆசிரியத்துறை
   ஆ) ஆசிரியத்தாழிசை
   இ) இணைக்குறள் ஆசிரியப்பா
   ஈ) ஆசிரிய விருத்தம்

10. ஒருபொருள் மேல் மூன்றடுக்கியும் தனியாகவும் வருவது
   அ) ஆசிரியத் தாழிசை
   ஆ) ஆசிரியத்துறை
   இ) ஆசிரிய விருத்தம்
   ஈ) அடிமறிமண்டில ஆசிரியப்பா

**விடைகள்** 1.ஈ 2.ஆ 3.அ 4.ஆ 5.ஈ 6.அ 7.இ 8.ஆ 9.ஈ 10.அ

## பகுதி - ஆ

### ❖ ஓரிரு சொற்களில் விடையளி

11. நான்கு பாவிற்கும் உரிய ஓசைகளைச் சுட்டுக.
12. நேரிசை வெண்பா எங்ஙனம் அமையும்?
13. குறள் வெண்பா என்பது யாது?
14. நேரிசை வெண்பாவை எவ்வாறு வகைப்படுத்தலாம்?
15. பஃறொடை வெண்பாவின் இலக்கணத்தைக் குறிப்பிடுக.
16. வெண்பாவின் ஈற்றடி எங்ஙனம் அமையும்?
17. குறள் வெண்பாவிற்குரிய இனங்கள் யாவை?
18. அடிமறிமண்டில ஆசிரியப்பா என்பதனைச் சுட்டுக
19. ஈற்றயலடி முச்சீராய் வருவது எவ்வகை ஆசிரியப்பா?
20. ஆசிரியப்பாவின் இனங்கள் யாவை?

## பகுதி - இ

### ❖ விரிவாக விடையளி

21. நேரிசை வெண்பாவின் இலக்கணத்தைக் குறிப்பிட்டு உதாரணங்கள் தருக.
22. நேரிசை வெண்பாவின் வகைகளுக்குச் சான்றுகள் தருக.
23. இன்னிசை வெண்பா பற்றி எடுத்துரைக்க.
24. சிந்தியல் வெண்பாவின் வகைகளைக் குறிப்பிடுக.
25. குறட்டாழிசை பற்றி விளக்குக.
26. வெளிவிருத்தத்திற்குச் சான்றுகள் காட்டி விவரி.
27. இணைக்குறள் ஆசிரியப்பாவினை எடுத்துரைக்க.
28. நால்வகை ஆசிரியப்பாக்களின் இலக்கணத்தை வரையறை செய்க.
29. நிலைமண்டில ஆசிரியப்பாவினை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
30. ஆசிரிய விருத்தம் பற்றிக் குறிப்பிடுக.

## பகுதி - ஈ

### ❖ கட்டுரை வடிவில் விடையளி

31. நான்கு பாக்களுக்கும் உரிய அடிகளையும் ஓசைகளையும் விவரிக்க.
32. வெண்பாவின் வகைகளைத் தொகுத்துரைக்க.
33. இன்னிசை வெண்பா, பஃறொடை வெண்பா, சிந்தியல் வெண்பா ஆகியவை பற்றி எடுத்துரைத்து உதாரணங்கள் தருக.
34. குறள் வெண்பாவிற்குரிய இனங்களை விளக்குக.
35. குறள்வெண்செந்துறை, குறட்டாழிசை ஆகியவை பற்றி விவரி.
36. வெண்டாழிசை, வெண்டுறை, வெளிவிருத்தம் ஆகியவற்றைச் சான்றுகளுடன் விளக்குக.
37. ஆசிரியப்பாவின் வகைகளைக் குறிப்பிட்டுச் சான்றுகள் தருக.

38. ஆசிரியப்பாவின் இனங்களை எடுத்துரைக்க.
39. ஆசிரியப்பாவும் அதன் இனங்களும் என்னும் தலைப்பில் கட்டுரை வரைக.
40. ஆசிரியப்பா பற்றிச் செய்யுளியலில் இடம்பெறும் செய்திகளைத் தொகுக்க.

# அலகு – 4

## பகுதி – அ

### ❖ சரியான விடையைத் தேர்ந்தெடு

1. கலிப்பாவிற்குரிய ஓசை
   அ) தூங்கல்
   ஆ) துள்ளல்
   இ) செப்பல்
   ஈ) அகவல்

2. கலிப்பாவின் உறுப்புகளுள் ஒன்று
   அ) தாழிசை
   ஆ) பகுதி
   இ) விகற்பம்
   ஈ) அசை

3. கலிப்பாவின் உறுப்புகளின் எண்ணிக்கை
   அ) 4
   ஆ) 7
   இ) 5
   ஈ) 6

4. கொச்சகக் கலிப்பாவில் ஒரு தரவு மட்டும் வருவது
   அ) தரவிணைக் கொச்சகக் கலிப்பா
   ஆ) மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா
   இ) தரவுக் கொச்சகக் கலிப்பா
   ஈ) சி.்.றாழிசைக் கொச்சகக் கலிப்பா

5. தாழிசையின் வேறுபெயர்
   அ) இடைநிலைப்பாட்டு
   ஆ) விட்டிசை
   இ) வாரம்
   ஈ) தனிநிலை

6. குறளடி நான்காய் மூன்று செய்யுள் ஒரு பொருள்மேல் அடுக்கி வருவன
   அ) ஆசிரியத் தாழிசை

ஆ) வஞ்சித் தாழிசை
இ) வஞ்சித் துறை
ஈ) கலித்தாழிசை

7. வஞ்சிப்பாவின் ஈற்றில் வருவது
அ) தனிச்சொல்
ஆ) ஓரசைச்சீர்
இ) வெள்ளைச்சுரிதகம்
ஈ) ஆசிரியச்சுரிதகம்

8. வஞ்சிப்பாவிற்குரிய ஓசை
அ) தூங்கல்
ஆ) துள்ளல்
இ) அகவல்
ஈ) செப்பல்

9. மெய்ப்பொருளைச் சொல்லும் பா
அ) புறநிலை வாழ்த்து
ஆ) வாயுறை வாழ்த்து
இ) செவியறிவுறூஉ
ஈ) கைக்கிளை

10. வெண்பா முதலாக ஆசிரியம் ஈறாக வருவது
அ) கலிப்பா
ஆ) வஞ்சிப்பா
இ) மருட்பா
ஈ) அகவற்பா

**விடைகள்** 1.ஆ 2.அ 3.ஈ 4.இ 5.அ 6.ஆ 7.ஈ 8.அ 9.ஆ 10.இ

## பகுதி - ஆ

### ❖ ஓரிரு சொற்களில் விடையளி

11. கலிப்பாவின் உறுப்புகள் யாவை?
12. தனிச்சொல் என்பதன் வேறு பெயர்களைச் சுட்டுக.
13. போக்கியல் என்பது எதனைக் குறிக்கும்?
14. கொச்சகக் கலிப்பாவின் வகைகளைக் குறிப்பிடுக.
15. அராகம் என்றால் என்ன?
16. நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பாவின் அமைப்பைச் சுட்டுக.
17. வஞ்சிப்பாவின் இனங்கள் யாவை?
18. வஞ்சிப்பாவின் ஈறு எங்ஙனம் அமையும்?
19. புறநிலை வாழ்த்து என்றால் என்ன?
20. மருட்பா அமையும் பொருண்மைகளைக் குறிப்பிடுக.

## பகுதி - இ

### ❖ விரிவாக விடையளி

21. நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பாவிற்கு உதாரணம் தந்து விளக்குக.
22. அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா பற்றி விளக்குக.
23. கலிப்பாவின் உறுப்புகள் பற்றி எடுத்துரைக்க.
24. வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பாவினைச் சான்று காட்டி விளக்குக.
25. வெண்கலிப்பா, கலிவெண்பா ஆகியவற்றை விவரி.
26. கொச்சகக் கலிப்பாவின் வகைகள் பற்றிக் குறிப்பு வரைக.
27. கலிப்பாவின் இனங்களை எடுத்துரைக்க.
28. வஞ்சிப்பாவின் இலக்கணத்தைக் குறிப்பிட்டு அதன் இனங்களைச் சுட்டுக.
29. வாயுறை வாழ்த்தினைச் சான்றுடன் விளக்குக.
30. செவியறிவுறூஉ பற்றி எடுத்துரைக்க.

## பகுதி - ஈ

### ❖ கட்டுரை வடிவில் விடையளி

31. கலிப்பாவின் வகைகளைத் தொகுத்துக் கட்டுரை வரைக.
32. கலிப்பாவின் வகைகளும் இனங்களும் என்னும் தலைப்பில் ஆய்க.
33. நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா, அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா ஆகியவை பற்றிக் குறிப்பிட்டு உதாரணங்கள் தருக.
34. கொச்சகக் கலிப்பாவினை வகைப்படுத்திச் சான்றுகள் தருக.
35. கலிப்பா பற்றிச் செய்யுளியலில் இடம்பெறும் கருத்துகளைத் தொகுக்க.
36. வஞ்சிப்பா பற்றிய செய்திகளைச் செய்யுளியல் வழி விவரிக்க.
37. வஞ்சிப்பாவின் இனங்கள் மற்றும் அதன் ஈறு பற்றி எடுத்துரைக்க.
38. மருட்பாவின் வகைகளை விளக்குக.
39. நான்கு வகை மருட்பாக்களுக்கும் சான்றுகள் தந்து விளக்குக.
40. செய்யுளியலில் மருட்பா பற்றிய செய்திகளை ஆய்க.

EDUCATION IS WEALTH

## அலகு – 5

## பகுதி – அ

### ❖ சரியான விடையைத் தேர்ந்தெடு

1. ஒற்றளபாய்விடின் ------------- அலகாம்
   அ) ஓரலகு
   ஆ) ஈரலகு

இ) மூவலகு
ஈ) நான்கலகு

2. தேமா, புளிமா ஆகிய நேரீற்றியர்சீர்கள் எந்தப் பாவினுள் புகாது
அ) மருட்பா
ஆ) வஞ்சிப்பா
இ) கலிப்பா
ஈ) ஆசிரியப்பா

3. வெண்பாவில் இடம்பெறாத தளை
அ) இயற்சீர் வெண்டளை
ஆ) ஒன்றிய வஞ்சித்தளை
இ) வெண்சீர் வெண்டளை
ஈ) மேற்கூறிய மூன்றும்

4. ------------- பாவினுள் கலியடியும் வெள்ளடியும் அருகியன்றி வாரா
அ) வெண்பா
ஆ) ஆசிரியப்பா
இ) கலிப்பா
ஈ) வஞ்சிப்பா

5. ஐஞ்சீரடி வரப்பெறாத பாவகை
அ) வெண்பா
ஆ) ஆசிரியப்பா
இ) கலிப்பா
ஈ) வஞ்சிப்பா

6. ய, ர, ல, ழ ஆகிய ஒற்றுகள், இடையில் வரும் எதுகை
அ) இன எதுகை
ஆ) வருக்க எதுகை
இ) நெடிலெதுகை
ஈ) ஆசெதுகை

7. தாழிசைகட்கு ---------அடி சிறுமை (சிற்றெல்லை)
அ) 3
ஆ) 2
இ) 4
ஈ) 6

8. விகாரத்தின் வகைகள்
அ) 6
ஆ) 5
இ) 8
ஈ) 4

9. பின்வருவனவற்றுள் வனப்பு அல்லாதது
அ) அம்மை

ஆ) தொன்மை
இ) தோல்
ஈ) வகையுளி

10. பொருள்கோள் ------------ வகைப்படும்
அ) 4
ஆ) 8
இ) 9
ஈ) 6

**விடைகள்** 1.அ 2.இ 3.ஆ 4.ஈ 5.அ 6.ஈ 7.ஆ 8.அ 9.ஈ 10.இ

## பகுதி – ஆ

### ❖ ஓரிரு சொற்களில் விடையளி

11. சீரும் தளையும் சிதைய வந்தவிடத்து அலகு பெறாதவை எவை?
12. ஐகாரக்குறுக்கம் எவ்வாறு அலகிடப்படும்?
13. வெண்பாவிற்குரிய தளைகள் யாவை?
14. இரணத்தொடை என்றால் என்ன?
15. இனவெதுகையை எவ்வாறு வகைப்படுத்தலாம்?
16. கூன் என்பது யாது?
17. தொன்மை என்பதன் பொருள் தருக.
18. அடிமறிமாற்றுப் பொருள்கோள் எவ்வாறு அமையும்?
19. புனைந்துரை என்றால் என்ன?
20. வண்ணம் எத்தனை வகைப்படும்?

## பகுதி - இ

### ❖ விரிவாக விடையளி

21. எழுத்துகளை அலகிடும் முறை பற்றி ஒழிபியல் கூறுவனவற்றை விளக்குக.
22. ஒருசார் அசைகட்குரிய இலக்கணத்தை ஒழிபியல் எங்ஙனம் எடுத்துரைக்கின்றது?
23. கலிப்பாவினுள் புகப்பெறாத சீர்கள் யாவை?
24. முரண்தொடையை எவ்வாறு வகைப்படுத்துவர்? உதாரணங்கள் தருக.
25. இனவெதுகை, இனமோனை ஆகியவற்றுக்குச் சான்றுகள் தந்து விளக்குக.
26. ஆசெதுகை பற்றி விவரி.
27. தரவு, தாழிசைகட்குரிய அடிவரையறை பற்றிக் குறிப்பிடுக.
28. விகாரத்தின் வகைகளை விளக்கி வரைக.
29. நிரனிறைப் பொருள்கோள் பற்றி எடுத்துரைக்க.
30. புனைந்துரை பற்றி ஒழிபியல் கூறுவனவற்றைப் புலப்படுத்துக.

## பகுதி - ஈ

## ❖ கட்டுரை வடிவில் விடையளி

31. ஒருசார் எழுத்துகட்குரிய இலக்கணங்களாக ஒழிபியல் கூறுவனவற்றை எடுத்துக்காட்டுகளுடன் விவரி.
32. சீரும் தளையும் செய்யுளகத்து நிற்கும் முறைமையைப் புலப்படுத்துக.
33. அடிமயக்கம் பற்றி ஒழிபியலில் அமைந்துள்ள செய்திகளை விளக்குக.
34. சிறப்பில்லாதவை என்று சொல்லப்பட்ட எதுகை மோனைகளை எடுத்துக்காட்டுகளுடன் வகைப்படுத்துக.
35. கூன் மற்றும் வகையுளி பற்றித் தெளிவுபடுத்துக.
36. வாழ்த்து, வசையின் வகைகளை விவரி.
37. வனப்பின் வகைகளைச் சான்றுகளுடன் எடுத்துரைக்க.
38. ஒழிபியல் பொருள்கோளை வகைப்படுத்தும் முறைமையைச் சான்றுகளுடன் நிறுவுக.
39. வண்ணம் பற்றிய செய்திகளைக் குறிப்பிட்டு வகைகளை விளக்குக.
40. காரிகையில் இடம்பெற்றுள்ள செய்திகளை ஒழிபியல் தொகுத்துக் கூறும் முறைமையில் கட்டுரைப்படுத்துக.

THIRUPPANANDAL
EDUCATION IS WEALTH